REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'காணமற்போன' மாலங்காவ்!

மாஸ்கோ, எப். 4—

"காணவில்லை; பெரியாவின் கதிக்காளாக்கப்பட்டாரா?" என்றெல்லாம் பேசப்பட்ட மாலங்காவ், கடந்த யுத்தத்தின்போது விடுதலைச் சேனையால், ஹங்கேரி மீட்கப்பட்ட 10-வது நினைவு நாள் விழாவினை ஒட்டி நடைபெற்ற கொண்டாட்டத்தில் இதர சோவியத் தலைவர்களுடன் கலந்து கொண்டிருக்கிருர் என்று கூறப்படுகிறது.

மலர் 2] சென்னை: பங்குனி 23உ செவ்வாய் (5—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 24உ புதன் (6—4—55) [இதழ் 251

நமது கண்டன முழக்கம் கேட்டு கலக்கம்

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை நிறுவ இந்தியப்பேரரசு இணக்கம்?

திட்டத்தில் தென்னடு புறக்கணிக்கப்பட்டதேன்?

வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு தென்னட்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் இடித்துரை!

புதுடில்லி, ஏப். 4—

இந்தியப் பேரரசின் ஏகாதிபத்தியப் போக்கினை,—ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து, கடந்த மார்ச் திங்கள் 20-ம் நாள் அன்று திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக முழுதும் எழுப்பிய கண்டன முழக்கம், டெல்லி மக்கள் சபையில் இன்னும் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.

அந்த முழக்கத்தால் பெருமளவு கலக்கமடைந்துள்ள இந்தியப் பேரரசிற்கு, சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையை நிறுவ இணக்கம் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

தென்னிந்தியாவில் இரும்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படுவது உறுதிதான் என்றும், ஆனலும், இதுபற்றிய இறுதியான முடிவுகள் உறுதிப்படவில்லை என்றும், அனேகமாக, தொழிற்சாலை சேலத்திலேயே இடம் பெறும் என்றும், விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உற்பத்தி இலாகா மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, மக்கள் சபையில் பல உறுப்பினர்கள், சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நிறுவப்படுவதின் அவசியம் குறித்து இந்தியப் பேரரசிற்கு இடித்துரைத்திருக்கிருர்கள்.

தோழர் எஸ். வி. ராமசாமி (காங்-சென்னை) பேசுகையில், சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிகள், ஜெர்மன் நிபுணர் கண்டுள்ளபடி மிக உயரிய தரத்தவை; அவற்றைப் பயன் படுத்த நான்காவதாகத் துவங்கவிருக்கும் உருக்குத் தொழிற்சாலையை சேலத்தில் துவக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியிருக்கிருர்.

ஏ. எம். தாமஸ் என்ற திரு-கொச்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் பேசுகையில், "தொழிற்சாலைகள் துவங்குவதில் தென்னிந்தியா முழுவதுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது—அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது; டி. டி. டி. மருந்து உற்பத்திச் சாலையை திரு-கொச்சியில் துவங்க வேண்டும் என்ற கோரிக்கை, நிராகரிக்கப்பட்டது; கொச்சித் துறைமுகத்தை அடுத்து, ஏன் ஒரு, கப்பல் கட்டும் தொழிற்சாலை நிறுவக் கூடாது?" என்று முழங்கியிருக்கிருர்.

பார்மோசா நெருக்கடி

செஞ்சீனப் பிரதமருடன் விவாதம்!

ஜகார்தா, ஏப். 4—

பார்மோசா பிரச்சினை பற்றி அமெரிக்கா—செஞ்சீன ஆகிய நாடுகளிடையே இருந்துவரும் தகராறுகள் பற்றி, பாண்டுங் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்கு வரும் சீனப் பிரதமர் சௌ-என்-லாய் அவர்களிடம், கொழும்பு நாடுகளான பர்மா, இலங்கை, இந்தோனேஷியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகியவை விவாதிக்கும் என்று, இங்கிருந்துவரும் "மெர்டேகா" என்ற பத்திரிகை எழுதியுள்ளது.

இந்தப் பிரச்சினை, மாநாட்டின் விவாத நிகழ்ச்சி நிரலில் இடம் பெருவிட்டாலும், தனிப்பட்ட முறையில் விவாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அலை ஓயுமா? அமைதி நிலவுமா?

மேற்கு பாகிஸ்தான் முதன் மந்திரியாக டாக்டர் கான் சாகிப் நியமனம்

கராச்சி, ஏப். 4—

ஒரே மாநிலமாக இணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தின் முதல் முதன்மந்திரியாக, டாக்டர் கான் சாகிப்பை பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குலாம் முகம்மது நியமித்துள்ளார் என்று தெரிகிறது.

இத்துடன், முதல் கவர்னராக எம். ஏ. குர்மானி நியமனம் பெற்றுள்ளதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கவர்னர் ஜெனரலுக்குள்ள விசேட அதிகாரங்களைக்கொண்டு இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவாம்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியினர் 'முணுமுணு'க்கிருர்கள் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் முஸ்லிம் லீக் கட்சியை படிப்படியாக ஒழித்துக் கட்டிவிடவே ஆட்சியாளர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனராம்.

லீக் கட்சியினரான், குவாஜா நஜிமுதீனை, பிரதமர் பதவியிலிருந்து நீக்கியது—கடந்த அக்டோபரில் முகம்மது அலி மந்திரி சபையை திருத்தியமைத்தது—பெருவாரியான லீகர்கள் இருந்த அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது ஆகியவை எல்லாம், தங்கள் குற்றச்சாட்டிற்கு ஆதாரமெனவும், இப்போது டாக்டர் கான் சாகிப் மேற்கு பாகிஸ்தான் முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பது, லீக் கட்சியை ஒழித்துக் கட்டும் இறுதி நடவடிக்கை எனவும் முஸ்லிம் லீகர்கள் கருதுகின்றனராம்.

வேறு சிலர், 'முஸ்லிம் லீக், பாகிஸ்தான் நல்வாழ்விற்கு வழிகாட்டத் தவறிவிட்டது; எனவே லீக் கட்சியல்லாத பிறருக்கும் சந்தர்ப்பம் தரவேண்டுவது நியாயமே,' என்று கூறுவதாகவும் அறியக்கிடக்கிறது.

எல்லாம் ஒப்பந்த மயம்!

துருக்கி-ஈராக் ஒப்பந்தத்தில் சேர பாகிஸ்தானிற்கு அழைப்பு

பிரிட்டன்-துருக்கி புது ஒப்பந்தம்!

இஸ்தாம்புல் ஏப். 4—

துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தில் பாகிஸ்தானையும் சேருமாறு அழைப்பு ஒன்றை பாக் பிரதமர் முகம்மது அலியிடம் கராச்சியில் தந்திருப்பதாக, அங்காராவிலிருக்கும் துருக்கி வெளிநாட்டிலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதற்கிடையில், பிரிட்டனும் ஈராக்கும் பாக்தாத் நகரில் ஒரு கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

மேலும் ஏற்கனவே துருக்கி ஈராக் ஒப்பந்தத்தில், அமெரிக்காவுடன் பிரிட்டனும் கூட்டுச் சேருவதாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஏற்கனவே, துருக்கியுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளது. இதுவன்றி 'சீட்டோ' ஒப்பந்தத்தில் அங்கத்தினராயிருப்பதினுல், பிரிட்டனுடனும் தொடர்பு கொண்டிருக்கிறது என்பதும் அறிந்ததே.

மத்திய கிழக்கு நாடுகளின் பாதுகாப்பிற்காக உருவாகியுள்ள, துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதர நாடுகளும், ஈரான் உள்ளிட்ட முஸ்லீம் நாடுகளும்—அமெரிக்காவும் நாளாவட்டத்தில் சேரக்கூடும் என்று இங்கிலாந்து நம்புகிறதாம்.

என்ன மர்மமோ?

லாகூர், ஏப். 5—

பாகிஸ்தான் பஞ்சாப் சட்டசபையை, கவர்னர் நேற்று திடீரென ஒத்திவைத்து விட்டாராம்; இவ்வுத்தரவைக் கண்ட சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் திகைத்துத் திரும்பினராம்.

புது டில்லியில்தான்!

மத்திய சமூக க்ஷேமநலக் குழுவின் ஆதரவில், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்களுக்கு ஓய்ந்த நேரத்தில் வேலையளிப்பதற்காக புதுடில்லிக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீக்குச்சித் தொழிற்சாலை ஒன்றில் சுமார் 500 பெண்கள் தீக்குச்சிகள் தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர் என்று தெரியவருகிறது.

செஞ்சீனவில் ஒரு 'பெரியா'?

கட்சிக்குத் துரோகம் இழைத்தாராம்!

முன்னுள் குடியரசுத் துணைத் தலைவர் 'தற்கொலை'!

ஹாங்காங், ஏப். 4—

செஞ்சீன அரசாங்கத்தின் முன்னுள் துணைத் தலைவரான கா காங் என்பவர் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டியின் ஒருமுகமான கண்டனத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிருர்.

அவர் ஒரு காலத்தில், 'மா - சே - துங்கின் வாரிசாக இருப்பார்' என்றெல்லாம் கூறப்பட்டாராம்.

அவரை கட்சியிலிருந்தே வெளியேற்ற வேண்டும் என்றும், கமிட்டி முடிவு செய்ததாம்.

இத்தகவலை பீகிங் வானெலி அறிவித்துள்ளது.

கிழக்கு சீன இராணுவ மாவட்டத்தின் அரசியல் 'கமிசாரா'க இருப்பவரும், பிரபல கம்யூனிஸ்டுத் தலைவருமான ஜாவ்-ஷு-சின் என்பவரையும் கட்சியிலிருந்து வெளியேற்ற 'கமிட்டி' சிபாரிசு செய்ததாம்.

மத்திய கமிட்டியின் இறுதி நாள் கூட்டத்தின்போது, குடியரசுத் தலைவர் மா-சே-துங்கும் உடனிருந்தார் என்றும், இதுபற்றி பீகிங் வானெலி, நாளை அதிகாரபூர்வமான செய்தியினை ஒலி பரப்பும் என்றும் கூறப்பட்டது.

கா காங், ஜாவ்-ஷு-சின் ஆகியோரைப் பற்றி வேறு தகவல்கள் எதுவும் தரப்படவில்லை.

மா-சே-துங்கின் வலது கரமாக வர்ணிக்கப்பட்டவராம், கா காங். அவரது பணி குறித்து 'பீப்பிள்ஸ் டெய்லி' போன்ற இதழ்கள் முன்பு வெகுவாகப் பாராட்டுதல் தெரிவித்திருந்தனவாம்.

★

லண்டன், ஏப். 4—

சீனக் குடியரசின் முன்னுள் துணைத் தலைவரான கா காங், தான் கட்சிக்கு துரோகம் செய்துவிட்டதாகக் கூறி, தற்கொலை செய்துகொண்டதாக நவசீன செய்தி நிறுவனம் அறிவிக்கிறது.

கைதிகளின் கிராமிய நடன இசை!

கட்டாக் வானெலியில் ஒலிபரப்பப்படும்

கட்டாக், ஏப் 3—

கட்டாக் மாவட்ட சிறையில் உள்ள கைதிகள், அகில இந்திய வானெலி நிலையம் பதிவு செய்து கொண்ட ஒரு கிராமிய நடன இசையில் பங்கு பெற்றனர்!

இந்த இசை, கட்டாக் வானெலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படுமாம்

இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்த மாநில உதவி உள்நாட்டிலாகா மந்திரியான நீலாமணி ரௌத்ராய், "சிறையில் இப்போது மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், கைதிகளை புதுமனிதர்களாக்கும் நோக்குடனேயே செய்யப்படுகின்றன.

இதை எந்த இதர பொழுதுபோக்கு ஏற்பாடுகளும், கைதிகளின் உள்ளத்தில், 'சமூகம் அவர்களுக்கு கொடுமை புரியவில்லை; ஆனல், அவர்கள் திருந்திய மனிதர்களாக வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது' என்ற எண்ணத்தை ஊட்டும் என்று நம்புகிறேன்." என்று தெரிவித்திருக்கிருர்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5-4-'55 செவ்வாய்

பண்டிதரின் மனப்பாங்கு

"கொடுமை சகிக்கவில்லை! பொறுக்க முடியவில்லை— இனியும் வாளாவிருக்க மாட்டோம்;

"உலக நாடுகளே! உங்கள் கருத்தென்ன? தெளிவாகச் சொல்லிவிடுங்கள்;

"தென்னுப்பிரிக்காவில்உள்ள வெள்ளை அரசாங்கம், அங்குள்ள கோடிக்கணக்கான கறுப்பர்—இந்தியர், ஆப்பிரிக்கர்—மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் நிற பேதக் கொடுமை குறித்து உங்கள் எண்ணம்தான் என்ன? என் வாய்மூடி மௌனிகளாய் இருக்கின்றீர்?

"கமயூனிசமோ அல்லது கம்யூனிச எதிர்ப்போ எதைக் கருதியும்,பகிரங்கமாக அங்கு நடத்தப்படும் இன அடக்குமுறையை நாங்கள் சகித்துக்கொள்ளத் தயாராக இல்லை;

"தென்னுப்பிரிக்க சர்க்காரே! முதலில் சற்று நாகரீகம் தெரிந்துகொள்ள முற்படுங்கள்!"

பண்டித நேரு முழங்கியிருக்கிருர்—நேற்று முன்தினம் புதுடில்லியில், கூட்டமொன்றில், இதுபோன்று!

தென்னுப்பிரிக்காவில் வெள்ளையர், கறுப்பர்மீது நடத்திவரும் இனபேதக் கொடுமைகள் உலகு அறிந்தவை; அங்கு கொடுமைக்கு ஆளாக்கப்படுபவர் இந்தியர் என்றதும் கொதிக்கிறது பண்டிதரின் உள்ளம்!

எரிமலையெனக் குமுறுகிருர்—அறைகூவிக் கேட்கிருர், அகில உலகத்தையும்—'ஏன் பேசவில்லை உங்கள் நாக்கு? காணவில்லையா நீங்கள் அந்தக் காணச் சகியாத கொடுமைகளை?'—என்று!

பத்திரிகைகள் எழுதுகின்றன—'பண்டித நேரு உணர்ச்சிவயப்பட்டு, தம் உள்ளக்குமுறலை உலகுக்கு எடுத்துக்காட்டினுர்'—என்று!

தென்னுப்பிரிக்க வெள்ளை இன சர்க்காரால், அங்கு வாழும் ஆப்பிரிக்க, இந்திய கறுப்பு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை பண்டித நேரு கண்டித்திருக்கிருர் — நியாயந்தான்; ஆனல், 'ஒரு இனம், மற்றொரு இனத்தை அடக்கி ஆளுவது—கொடுமை' என்று கண்டிக்கும் 'நாகரீகம்' காப்பாற்றப்படுவதற்காக பண்டிதர் கண்டனம் எழுப்பியிருக்கிருர் என்பதைக் காட்டிலும், அந்தக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருப்பவர் தம இனத்தவர் என்ற காரணத்தாலேயே பண்டிதரின் கண்டனக் குரல் சற்று வன்மையாககூட எழும்பியிருக்கிறது எனக் கொள்வது முழுவதும் தவறுடையதெனச் சொல்லிவிட முடியாது.

கொடுமையும், நிற பேதமும், இன ஒதுக்கலும், அடக்குமுறையும் எங்கு நடந்தாலும், எவருக்கு இழைக்கப்பட்டாலும் கண்டிக்கப்பட வேண்டியவைகளேயாகும்; இது பொதுமரபுமாகும்.

ஆனல், கொடுமை—அதே அளவும், தரமும் இல்லாவிடினும் — இழைக்கப்படுகிறது— இலங்கைவாழ் 'இந்தியர்' என்ற போர்வை போர்த்தப்பட்டுள்ள திராவிடருக்கு; வளருகிறது, அநீதி அங்கே! அதுபற்றியும் பேசியிருக்கிருர் பண்டிதர், மக்கள் சபையில்—ஆனல், கொடுமைக்கு ஆளாவோரின் துயரங்கள் துடைக்கப்படுவதற்கு வழிகோலாத வகையில்!

கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில், இந்தியாவும் - இலங்கையும், இலங்கைவாழ் 'இந்தியர்' பிரச்சினைக்குப் பரிகாரம் எனக்கூறி, ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தை சில திருத்தங்களுடன் புதுப்பித்துக்கொண்டனர்.

அந்த ஒப்பந்தம் குறித்தும், அதனைத் தொடர்ந்த விளைவுகள் குறித்தும் நாம் அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருக்கிருேம்.

இப்போது அந்த ஒப்பந்தத்தை மீறி நடப்பதாக இலங்கை மீது இந்தியப் பேரரசும், 'ஒப்பந்தத்தை அமுல் செய்ய இந்தியா ஒத்துழைக்கவில்லை,' என்று இலங்கை சர்க்காரும் குற்றஞ்சுமத்தி வருகின்றனர்.

இலங்கையில் தற்போது சட்டமாக்கப்பட்டுள்ள குடியேற்ற, வெளியேற்றச் சட்டத் திருத்த மசோதாவின் சில பிரிவுகளை இந்திய அரசாங்கம் ஆட்சேபித்திருக்கிறதாம்.

இலங்கை—இந்தியா ஒப்பந்தப்படி, இலங்கையின் வாக்காளர் பட்டியலில் இடம் பெருத இந்திய வம்சாவளியினரது பெயர்களடங்கிய பட்டியல் தயாரிக்க வேண்டும் என்றும், இதற்குப் பின்னரும் அந்தப் பட்டியலில் இடம் பெருத எவரேனும் இலங்கையிலிருந்தால் அவர்மீது, 'சட்ட விரோதமாக வந்தவர்,' என்று குற்றஞ்சுமத்தலாம் என்றும் இந்தியப் பேரரசு தெரிவித்திருந்ததாம்.

ஆனல் இலங்கையோ, அத்தகைய பட்டியல் தயாரிக்குமுன்னரே, இலங்கையில் காணும் எந்த இந்தியரையும் கைது செய்து, அவர் சட்ட விரோதமாக அங்கு வந்தார் என்று குற்றஞ்சாட்டவும், 'குற்றமற்றவர்,' என நிரூபிக்க வேண்டியது அவர் பொறுப்பெனவும் இந்திய சர்க்கார் ஆட்சேபித்திருக்கிற சில பிரிவுகளைக்கொண்ட மேற்குறித்த சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. 'இது கொடுமை; அநீதி,' என்றும் கூறப்படுகிறது.

"இலங்கையில் வாழும் 'இந்தியரி'ல் எவ்வளவு அதிகமான பேர்களை வெளியேற்ற முடியுமோ அவ்வளவு அதிகமான பேரை வெளியேற்றியே தீருவது," என்று முடிவு கட்டிவிட்ட இலங்கையின் ஆளும் வர்க்கத்தினரிடம், இந்தியர் பிரச்சினையைத் தீர்ப்பதில் நல்லெண்ணம் தேவையான அளவு இருக்குமென எதிர்பார்க்கக்கூடாததுதான். பிரச்சினைக்கு ஆளாக்கப்பட்டிருப்பவர்கள்தான், பிரச்சினைக்குரிய சரியான பரிகாரங்களைத் தேடுவதில் நல்லெண்ணமும், உள்ளத் தூய்மையும் கொண்டவர்களாகஇருக்க வேண்டும்.

இலங்கை இந்தியர் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதில், 'இந்தியப் பேரரசிற்கு, தென்னுப்பிரிக்காவில் கொடுமைக்காளாகும் இந்தியர் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதில் இருக்கும் நல்லெண்ணம் இருக்கவில்லை,' என்று இலங்கை 'இந்தியர்' கூறினல், அது முற்றிலும் தவறுடையதாகாது என்றே கருதுகிருேம்.

'இலங்கை-இந்தியா ஒப்பந்தமே பிரச்சினைக்குப் பரிகாரம்,' என்ருர்கள்; விளைவுகள் விபரீதமாகி வருகின்றன! இதற்குக் காரணம், இலங்கை ஆள்வோரின் நல்லெண்ணக் குறைவு மட்டுமல்ல—இலங்கை இந்தியர். பிரச்சினையில் இந்தியப் பேரரசின் அக்கரையின்மையும், கவனக் குறைவும் கூடத்தான் காரணமாகும்.

பலமுறை நாம் எடுத்துக்காட்டிய மாதிரி ஒப்பந்தம் இன்று தன்னிஷ்டம்போல் இலங்கை ஆட்சியினர் வியாக்கியானம் செய்கிற வகையில் 'ஓட்டை'கள் இல்லாதிருந்திருக்குமானல், சற்று கவனமும், 'அவர்களும் நம்மவர்கள்தானே,' என்ற எண்ணமும் கொண்டு ஏற்கப்பட்டிருக்குமானல், இன்று இலங்கைவாழ் திராவிடர்கள் அநீதிக்காளாகி அவதியுறுவதற்கு, 'இந்தியப் பேரரசும் பொறுப்பாளிதான்,' என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பி இருக்கலாமே!

"தென்னுப்பிரிக்க இந்தியர் அனுபவிக்கும் கொடுமை கண்டு கொந்தளிக்கும் பண்டிதரின் உள்ளம், எங்கள் இன்னல் கண்டு நெகிழக்கூடக் காணுமே, ஏன்?"—என்று கேட்கிருர்கள், இலங்கை 'இந்தியர்!'

தென்னுப்பிரிக்காவில் குடியேறியுள்ள 'இந்தியர்' வடநாட்டவர்—இலங்கை வாழ் 'இந்தியர்' திராவிடர்—என்ற உண்மைதான், பண்டிதரின் மாறுபட்ட உளப்போக்குக்குக் காரணமா?

'நாச'த்திற்கு எதிராக நல்ல திட்டங்கள்

ஆனல் தெற்கில் அல்ல; வடக்கில்தான்!

பம்பாய் — ஆக்ரா ராஜபாட்டையிலுள்ள சம்பல் நதிமீது ஒரு பாலம் கட்டும் முயற்சி நடைபெற்று வருகிறது 2,432 அடி நீளமுள்ள இந்தப் பாலம் வெள்ள காலத்தில் 27 அடி உயர நீரின் வேகத்தைத் தாங்கும்படி அமைக்கப்படும். அவ்வளவு பெரிய வெள்ளம் இதுவரையில் சம்பல் நதியில் பெருகியதில்லை. வெள்ளம் அதிகமாகி பாலத்தின்மீது வழிந்தோடினுலும் வேகத்தைத் தாங்கும்படி நீளமாக அமைக்கப்படும் இந்தப் பாலம் உலகத்தில் முதன்மையானதாகும்.

மிர்ஜாபூர் மாவட்டத்தில், ஸோன் நதிமீது 3,300 அடி நீளமுள்ள காங்கிரீட் பாலம் கட்டும் முயற்சியும் நடைபெற்றுவருகிறது 75 அடி ஆழத்திற்கு அஸ்திவாரமும், 150 அடி விட்டமுள்ள 'கண்'களுமுள்ள இந்தப் பாலம் ஆசியா — ஐரோப்பாக் கண்டங்களில் அமைக்கப்படும் பிரம்மாண்டமான காங்கிரீட் பாலமாகும்.

மொழிவழி மாநிலப் பிரிவினை

அம்பாலா மாநாடு தரும் திட்டம்

"ஐதராபாத் மாநிலத்தைத் துண்டாட வேண்டும்; அதில் உள்ள பல மொழிப் பகுதிகளையும், அந்தந்த மொழி பேசும் மாநிலங்களுடன், அதே நேரத்தில் இணைக்க வேண்டும்,"

என்று, அம்பாலாவில் நடைபெற்ற மூன்ருவது மொழிவழி மாநில அமைப்பு மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பெற்றது.

கீழ்க்கண்ட வகையில் நாடு மொழிவழியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும், மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது:—

(அ) தென்னுட்டுச் சூழ்நிலைகள் தெளிவாக இருப்பதாலும், பிரதேசங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக-ஒரே இயல்பினவாக இருப்பதாலும், சம்யுக்த மகாராஷ்டிரம், விசால ஆந்திரம், ஐக்கிய கேரளம், சம்யுக்த குஜராத், தமிழ் நாடு, மகாகோசலம் ஆகிய மொழிவழி மாநிலங்கள் உருக்குலையாமலும், பிற மொழிப் பகுதி ஆதிக்கமில்லாமலும், பிரிக்காமலும் அமைக்கப்பட வேண்டும்.'

(ஆ) வடநாட்டில், பெப்சு மாநிலம் அழிக்கப்பட வேண்டும். பஞ்சாப், பெப்சு ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள பஞ்சாப் மொழி பேசப்படும் பகுதிகளை ஒன்ருக இணைத்து ஒரு பஞ்சாப் மொழி மாநிலம் அமைக்க வேண்டும்.

'மகா டில்லி' மாநிலம் அமைப்பதற்காக, பெப்சு, மேற்கு உத்தர பிரதேசம், பஞ்சாப், டில்லி ஆகிய மாநிலங்களில் உள்ள இந்தி பேசப்படும் பகுதிகளை ஒன்ருக இணைக்க வேண்டும்.

ஒரு இமாலய மாநிலம் அமைப்பதற்காக, இமாசலப் பிரதேசம், பெப்சு, பஞ்சாப், பகாரி மொழி வழங்கும் உ. பி பகுதிகள் ஆகியவற்றை இணைத்து, பகாரி மொழி பேசும் மொழிவழி மாநிலம் ஒன்றை அமைக்க வேண்டும்.

(இ) அதைப் போலவே, பீகார், வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் சில திருத்தங்கள் செய்தாக வேண்டும். அசாம் பல மொழி வழங்கும் ஒரு மாநிலமாகவே தொடர்ந்து இருக்க வேண்டும். அங்கு ஒவ்வொரு மொழிப் பகுதிக்கும், பாரம்பரிய உணர்வுடன் வளர்வதற்கான பாதுகாப்பு இருக்க வேண்டும்.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மொழிவழி மாநிலப் பிரிவினையை ஒட்டிய தீர்மானங்களை 'அமுல் நடத்துவதற்காக' 23 பேர் கொண்ட குழு ஒன்றினையும் மாநாடு நிர்ணயித்துள்ளது.

மருத்துவக் கல்வி

குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமும் இடம் பெறும்

திருச்சி, ஏப் 3—

வருகிற கல்வி ஆண்டிலிருந்து, அதாவது இவ்வாண்டு ஜுன் திங்கள் தொட்டு மருத்துவப் படிப்பில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய போதனையும், அதுபற்றிய நேரிடையான பயிற்சியும் அளிக்க சர்க்கார் முடிவெடுத்துள்ளதாக அமைச்சர் ஷெட்டி தெரிவித்திருக்கிருர்.

மேலும், சர்க்கார் தலைமை மருத்துவ நிலையங்களில் 'குடும்பக் கட்டுப்பாடு யூனிட்'டுகளை ஆரம்பிக்க மத்திய சர்க்காரின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியை எங்கு நிறுவுவது என்பதை சர்க்கார் விரைவில் முடிவு செய்யுமென்றும், திருச்சி, தஞ்சை, கோவை ஆகிய மூன்றிடங்களிலிருந்தும் தங்கள் தங்கள் பகுதியில் அந்தக் கல்லூரியை நிறுவ வேண்டும் எனக்கோரி மனுக்கள் வந்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

சமுதாய நலத் திட்டங்கள்

மக்கள் பங்கு விரிந்துள்ளது

தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம் ஆகியவைகள் அமுல் பற்றி சென்ற ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரை எடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கணக்கின்படி, மொத்தச் செலவுத் தொகையாகிய 13,48,00,000 ரூபாயில் பொதுமக்கள் பணமாகவும், பொருளாகவும், உழைப்பாகவும் கொடுத்திருப்பது ரூ. 7 48 கோடி எனத் தெரிகிறது. இந்தத் தொகை சர்க்காரின் மொத்தச் செலவில் 55 சதவிகிதம் ஆகும்.

மொத்தத்தில், தேசிய விஸ்தரிப்பு பிளாக்குகளில் சர்க்கார் செலவிட்டுள்ளதைவிட மக்கள் அதற்கென அளித்திருப்பது அதிகமாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

அதே காலத்தில், சமுதாய நலத்திட்ட வேலைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையில் சர்க்காரின் பணம் ரூ. 11,02,00,000 என்றும், மக்கள் அளித்துள்ள தொகை ரூ. 4,77,00,000 என்றும், மக்கள் அளித்துள்ள இத்தொகை சர்க்கார் செலவில் 43 சதவிகிதம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தற்போது, சமுதாய நலத்திட்ட வேலைகள் நாட்டில், 6,20,00,000 மக்கள் தொகையைக் கொண்ட 1 லட்சம் கிராமங்களில் அமுல் செய்யப்பட்டு வருகிறது

மேலும் இத்திங்கள் தொட்டு 132 தேசிய விஸ்தரிப்பு பிளாக்குகள் சமுதாய நலத்திட்ட வேலைக்கான பிரதேசங்களாக மாற்றப்படுகின்றன.

விவசாயத்துறையிலும் போதிய அளவு புது நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன; சுமார் 3,46,000 ஏகர் நிலம் பண்படுத்தப்பட்டும், 7,59,776 ஏகர் நிலம் பாசன வசதி அளிக்கப்பட்டும் சாகுபடி வசதி அதிகரிக்கச் செய்யப்பட்டது.

கிராமங்களில் கல்வி வசதிக்காக 14,445 முதியோர் கல்வி நிறுவனங்களும், 5,590 குழந்தைகள் பள்ளிகளும் திறக்கப்பட்டதுடன், 1,661 பள்ளிகள் ஆதாரக் கல்வி நிலையங்களாகவும் மாற்றப்பட்டன.

அதுபோலவே ஸ்தல ஸ்தாபன வேலைகளிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. 28,667 சமூக சேவை மத்திய நிலையங்களும், 20,951 மக்கள் ஸ்தாபன யூனிட்டுகளும், 14,126 கூட்டுறவு நிறுவனங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைப்பதிலும், மக்கள் தங்கள் உற்சாகத்தைக் காட்டிக்கொண்டனர்.

வாழ்க்கைக்கு ஏற்ற கல்வித் திட்டமா?

மாணவர்களிடையே ஒற்றுமை, ஒழுங்கு ஆகியவற்றை ஏற்படுத்தி, தங்கள் பிற்கால வாழ்க்கையைத் தாங்களே நிர்வகித்து, பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றத் தகுதியான,பயிற்சிஅளிக்கும் கல்வி திட்டம்ஒன்றை சென்னை சர்க்கார் வகுக்க உத்தேசித்துள்ளதாக, மதுரையில் நடைபெற்ற சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியின் பொன்விழாக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் சுப்பிரமணியம் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிருர்.

எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவதா?

கூர்ஜர மாநில அபிவிருத்திக்காக சென்னை தன் திட்டத்தைக் கைவிட வேண்டுமாம்!

கூர்ஜர முதன் மந்திரியின் கூற்றுக்கு சென்னை மந்திரிகள் பதில்

சென்னை, ஏப். 2—

ரூ. 31 கோடி செலவில் சென்னை அரசாங்கம் தயாரித்துள்ள குண்டா ஹைடல் திட்டத்தை, கூர்ஜர மாநில அரசாங்கத்தினுடைய பராபோல் திட்டத்திற்காக, மத்திய அரசாங்க திட்டக் குழுவிடம் வற்புறுத்தக்கூடாது என்பதற்காக கூர்ஜர முதன் மந்திரி சி. எம். பூனுச்சா, சென்னை முதன் மந்திரி காமராசர், மராமத்து மந்திரி சேதுபதி ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து விட்டதெனத் தெரிய வருகிறது

பராபோல் திட்டம், குண்டா ஹைடல் திட்டத்தைக் காட்டிலும் குறைவான செலவில் உருவானாலும்கூட, சுமார் 1,30,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யுமென்றும், இதில் கூர்ஜரம் உபயோகப்படுத்திக்கொள்ளப்போவது 30 ஆயிரம் கிலோவாட் மின்சாரம்தான் என்றும், சென்னை அரசாங்கம் குண்டா திட்டத்தின் மூலம் கிடைக்குமென எதிர்பார்க்கிற மின்சாரத்தை பராபோல் திட்டத்தின் மூலம் கூர்ஜரம் பெற்றதுபோக எஞ்சியுள்ள மின்சாரத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளலாமென்றும் கூர்ஜர முதன் மந்திரி சென்னை மந்திரிகளிடம் கூறினதாகத் தெரிகிறது.

கூர்ஜரத்தினுடைய அபிவிருத்தி கருதி திட்டக்குழுவிடம், பராபோல் திட்டத்திற்கு அங்கீகாரம் பெறுவதற்கு சென்னை அரசாங்கம் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூர்ஜர முதன் மந்திரி கேட்டுக் கொண்டாராம்.

ஆனல், சென்னை மந்திரிகளோ குண்டா திட்டத்தின் செலவில் பராபோல் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு இயலாதென அறிவித்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

கூர்ஜர திட்டம் குண்டா திட்டத்தைக் காட்டிலும் சிறியதாக இருக்க முடியாதென்றும், குண்டா திட்டத்தையும், பராபோல் திட்டத்தையும் பிணைத்து ஒன்றுக்கொன்று மாற்று திட்டங்களாக்க வேண்டுமென்பதற்கு சென்னை அரசாங்கத்திற்கு காரணமேதும் தெரியவில்லையென்றும் மராமத்து மந்திரி சேதுபதி எடுத்துக்காட்டியதாகவும் தெரிகிறது.

‘முட்டாள்தனம்!’

பசுவதைத் தடுப்பு இயக்கம்பற்றி பண்டித நேரு

டில்லி மக்கள் சபையில், காங்கிரஸ் கட்சி உறுப்பினரான ஷோவிந்த தாஸ் என்பவர், கறவை மாடுகளையும், உழவு மாடுகளையும் பாதுகாப்பதற்கென உத்தியோகப்பற்றில்லாமல் தனிப்பட்ட முறையில் கொண்டுவந்த மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அனுமதி கோரும் பிரரேபணையை பிரதமர் நேரு பண்டிதர் மிக ‘உக்கிர’மாக எதிர்த்திருக்கிறார்; இறுதியில் அப்பிரரேபணை நிராகரிக்கப்பட்டது.

பிரரேபணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது ஆதரித்து 12 வாக்குகளும், எதிராக 95 வாக்குகளும் கிடைத்தன; கம்யூனிஸ்டுகள் நடுநிலைமை வகித்திருக்கின்றனர்.

இம்மசோதாவிற்கான தமது எதிர்ப்பை எந்தவகையிலும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்றும், இதற்காகத் தமது பிரதமர் பதவியைக்கூடத் துறந்துவிடத் தாம் தயங்கப் போவதில்லை என்றும் பிரதமர் நேரு பண்டிதர் கூறியிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர், பசுவதை எதிர்ப்புக் கிளர்ச்சி முட்டாள்தனம் என்றும், இது தமது மனச் சாட்சிக்கு விரோதமான ஒரு நடவடிக்கை என்றும், உத்திரபிரதேச சர்க்கார் பசுவதைத் தடை மசோதாவை நிறைவேற்றியது முற்றிலும் தவறுனது என்று தாம் கருதுவதாகவும் கூறியிருக்கிறார்.

★

2,145 பேர் கைது

விசால பம்பாயில், சென்ற மாதம் மத்தி வரையிலும் பசுவதை எதிர்ப்பு சத்தியாக்கிரகம் சம்மந்தமாக 2,145 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் 1292 பேர் நீதி மன்றத்தில் விசாரணை செய்யப்பட்டதில் 1152 பேர் தண்டிக்கப்பட்டதாகவும், மற்ற 140 பேர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் மீதிருந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன என்றும், பம்பாய் மாநில முதலமைச்சர் பம்பாய் மேல் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

‘வெட்கக் கேடு!’

பண்டிதரின் கண்விழிப்பு!

“கனரகத் தொழில்கள் இல்லாமல் எந்த ஒரு நாடும் தனது சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவோ, பலப்படுத்திக் கொள்ளவோ முடியாது;

“நமது திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற ஏராளமாக எஞ்சினீயர்கள், ஓவர்சீயர்கள், டாக்டர்கள் போன்ற தொழில் நுணுக்க நிபுணர்கள் தேவைப்படுகின்றனர். இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் பிறநாட்டுத் தொழில் நுணுக்க உதவியை நாடுவது மிகவும் வெட்கக் கேடான ஒரு விஷயம். இத்தொழில்களுக்கான கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் பயிற்சி உயர்தரமாக இருக்க வேண்டும். மட்டரகத் தொழில் நுணுக்கக்காரர்களால் நாடு என்றுமே முன்னேறிவிட முடியாது. நிபுணர்களின் ‘எண்ணிக்கை’யைவிட அவர்களின் ‘தரம்’ தான் முக்கியமாகும்.”

இவ்வாறு, புதுடில்லி விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய பிரதமர் நேரு பண்டிதர் கூறியிருக்கிறார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் அவர், இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் மூலாதாரத் தொழில்களுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படுமென்றும், ஆனல், அத்தொழில்களில் அபிவிருத்தி ஏற்பட விவசாயத் துறை பலப்படுத்தப்படவேண்டுவதும் அவசியமானதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தஞ்சையில் முதல்தர கல்லூரி

தஞ்சையில் முதல்தரக் கல்லூரி ஒன்றிற்கு அங்கீகாரம் பெறுவதற்கு ஜாமீன் பணமாக 4,94,500 ரூபாயை, சத்திர உபரி நிதியிலிருந்து ஒதுக்கித் தரவேண்டுமென்று மாவட்டக் கழகம் செய்துள்ள முடிவை அமுல் நடத்த வசதி அளிக்க, தஞ்சை சத்திர நிதி மசோதா, சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

******* ***:*******

தி. மு. க. பொதுச்செயலாளர்

அண்ணுதுரை

தி.மு.கழக பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்களை திருநெல்வேலி மாவட்டத்திற்கு வந்து ஒரு வாரம் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும் என்று, பேரூர் பொதுக் குழுக் கூட்டத்தில் தோழர் சு. கந்தசாமி அவர்கள் கேட்டுக்கொண்டார். அதற்கு பொதுச்செயலாளர் அவர்கள் திருநெல்வேலி வருவதற்கு இசைவு தந்திருக்கிறார். ஆயினும், வரும் தேதி உறுதி செய்யவில்லை.

ஏப்ரல் மாதம் இரண்டாவது வாரம் செங்கோட்டைக்கு வருவார் என்றும், மற்றும் பல ஊர்களில் பொதுக் கூட்டங்களில் பேசுவார் என்றும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு அனுப்பியுள்ளார்கள்.

துண்டுப் பிரசுரங்களில் வெளியிட்டிருப்பதுபோல், ஏப்ரல் மாதம் இரண்டாவது வாரம் திருநெல்வேலிமாவட்டசுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகள் எதுவும் உறுதியாகவில்லை.

பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் தமது உடல் நலம் கருதி, டாக்டர் ஆலோசனைப்படி மருத்துவ நிலையத்தில் தங்கி சிகிச்சையும், ஓய்வும் பெற்று வந்தபிறகுதான், திருநெல்வேலி மாவட்டச் சுற்றுப்பிரயாணம் பற்றிய திட்டமான தேதி விபரங்கள் ‘நம் நாடு’ இதழில் வெளியிடப்படும்.

****:*****:*****:***

‘சாத்வீகப்’ புரட்சியாம்!

“விவசாயிகள் தங்கள் சாகுபடி முறைகளை அபிவிருத்தி செய்து மகசூலைப் பெருக்கவேண்டும்; தேசியச் செல்வம் பெருக்கப்பட்டால்தான் வாழ்க்கைத் தரமும் உயர முடியும்; இல்லையெனில் வறுமையைத்தான் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கும்.

“இந்தியாவில் தற்போது ‘சாத்வீகப்’ புரட்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; இதன் விளைவாக நாட்டின் வெளித்தோற்றமே இன்னும் பத்தாண்டுக் காலத்தில் மாறிவிடப் போகிறது,”

என்று, பண்டித நேரு, புதுடில்லியில் நடைபெற்ற தேசிய விவசாயிகள் மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

★

விவசாய நிதி திரட்டப்படுமா?

“ஒவ்வொரு விவசாயியும் தானாக ஒரு ரூபாய் சந்தாப்பணம் செலுத்தி ஒரு நிதி ஏற்படுத்தலாம்; அப்படிச் செய்வதால் சுலபமாக ரூ 20 அல்லது 25 கோடி வரை நிதி சேகரித்து, அந்நிதி விவசாய அபிவிருத்திக்கெனப் பயன்படுத்தப்படலாம்.”

இவ்வாறு, அதே மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய மத்திய சர்க்கார் விவசாய மந்திரி பஞ்சாபராவ் தேஷ்முக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திரத் தலைநகர்: மாற்றம் கிடையாது?

விசால ஆந்திரம் அமையும் வரையில் ஆந்திர மாநிலத் தலைநகராகக் கானூல்தான் இருக்குமென்றும், அதற்கிடையில் எவ்வித மாற்றமும் கிடையாதென்றும், ஆந்திர துணை முதலமைச்சர் சஞ்சீவ ரெட்டி கூறியிருக்கிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

மூன்று மாவட்ட கிராமங்கள் அபிவிருத்தி அடையுமாம்!

சென்னை, ஏப். 4—

இந்திய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்தில், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், இராமநாதபுரம் ஆகிய 3 மாவட்டங்களில் இருக்கும் கிராமங்களின் அபிவிருத்திக்கென விரிவான திட்டங்களைத் தயாரிக்க பரீட்சார்த்த திட்டம் ஒன்று அம்மாவட்டங்களில் இன்று முதல் அமுல் நடத்தப்படும் என செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் லோபோ பிரபு தெரிவித்திருக்கிறார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 முதல், 3 கோடி ரூபாய் வரை இதற்கென செலவு செய்ய வேண்டுமென்று மாநில சர்க்கார் திட்டமிட்டுள்ளதென்றும், இதன்படி, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும், அக்கிராம அபிவிருத்திக்கென 10,000 ரூபாய்வரை செலவு செய்யப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

★

6,500 கிராமங்களுக்கு மின்சார வசதி!

கிராம மின்சாரத் திட்டத்தின் கீழ் முதல் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள்ளாக சுமார் 6,500 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக டில்லி மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை 5,000 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்திருப்பதாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்குமென்று தற்போது குறிப்பிட முடியாவிட்டாலும் எப்படியும் 10 முதல் 12 ஆயிரம் கிராமங்களுக்காவது கிடைக்கலாம் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

★

மாநிலங்களுக்கு திட்டக் குழு கோரிக்கை

மாநில அரசாங்க மந்திரி சபைகள், ஜூன் திங்கள் மத்திக்குள்ளும், மாநில அரசாங்கங்கள் ஜூலை மத்திக்குள்ளும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தங்கள் திட்டங்களை அனுப்பித் தந்துவிடவேண்டும் என்று மத்திய அரசாங்க திட்டக் குழு கேட்டுக் கொண்டிருக்கிறதாம்.

இந்த காலவரையறையை நிர்ணயித்திருப்பதற்கு, மாநிலங்கள் தங்களின் 1956—57ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்குவதற்கு வசதியாக இருக்கவேண்டும் என்பது தான் காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

★

திரு-கொச்சி திட்டங்கள்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கென திரு-கொச்சி அரசாங்கம், திட்டக் குழுவிடம் 9 புதிய திட்டங்களைத் தாக்கல் செய்துள்ளது என்று தெரிகிறது.

இத்தகவலை முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் சட்ட சபையில், வரவு—செலவு திட்ட விவாதத்தின்போது வெளியிட்டிருக்கிறார்.

டி. டி. டி. மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஆல்வாயிலும், ஷெர்த்தாலையில் கண்ணுடித் தகடு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றும், மத்திய திருவாங்கூரில் ‘குளுகோஸ்’ உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றும், ‘கார்ட்போர்ட்’ உற்பத்தி சாலை ஒன்றும், மீன் எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றும், மற்றும் செங்கல் உற்பத்தி, சரிகை உற்பத்தி முதலியவற்றிற்கான தொழிற்சாலைகளும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவேண்டும் என,சிபாரிசு செய்யப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

இடம் பெயர்ந்தவர்களுக்கு

நஷ்ட ஈடுகள்

இந்திய சர்க்கார் தந்துள்ள பண உதவி விவரம்

1955 மார்ச் 12-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் மத்திய புனர்வாழ்விப்பு மந்திரி காரியாலயம், மேற்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்துவந்து, சொத்து பாத்தியதைகளுக்காக இந்தியாவில் நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பித்துக்கொண்டவர்களில் மேற்கொண்டு 932 பேருக்கு மொத்தம் சுமார் ரூ. 32,08,000 இடைக்கால நஷ்ட ஈடாக வழங்கியிருக்கிறது.

இடைக்கால நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ள மொத்தத் தொகை இத்துடன் ரூ. 10,08,00,000 ஆகிறது.

இதுதவிர, சுமார் 10,000 பேர்களின் பாத்தியதைகள் சம்பந்தமாக மொத்தம் சுமார் ரூ. 35 லட்சம் பெறுமானமுள்ள இரண்டு லட்சம் ஏக்கரா நிலங்களும், தோப்பு துரவுகளும் ஒதுக்கப்பட்டு அவை பைசல் செய்யப்பட்டுள்ளன. எனவே, அதையும் சேர்த்து மொத்தம் 11 கோடி ரூபாய்க்கு மேலேயே நஷ்ட ஈடாக வழங்கப்பட்டிருக்கிறது.

கதர் தொழில் அபிவிருத்திக்கு

இந்திய சர்க்கார் உதவி

$2\frac{1}{2}$ கோடி ரூபாய் உதவி— $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கடன்

“காதி, கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, 1954—55-ம் ஆண்டில், இந்திய சர்க்கார், அகில இந்திய காதி-கிராமத் தொழில்கள் போர்டுக்கு மொத்தம் சுமார் ரூ. 2,48,58,813 சகாய தொகையும், ரூ 1,60,09,300 கடன்களும் வழங்கினர். திருப்பித் தரப்படவேண்டிய அடிப்படையில் வியாபாரத்துக்காக முன்பணமாக அளிக்கப்பட்ட தொகைகளும் சகாயத்தொகைகளில் அடங்கியுள்ளன.

“1955 பிப்ரவரி மாத இறுதி வரை சகாயத் தொகைகளில் மொத்தம் ரூ. 1,77,90,769 வரையிலும், கடன் தொகைகளில் ரூ. 1,11,09,462 வரையிலும் போர்டு செலவழித்துள்ளது.

“கைக்குத்தல் அரிசி உற்பத்தித் தொழில், மாவரைக்கும் தொழில், தேனீ வளர்ப்புத் தொழில், நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தித் தொழில், உணவுக்குப் பயன்படாத எண்ணெய் வகைகளிலிருந்து சோப் தயாரிக்கும் தொழில், தோல் தயாரிப்புத் தொழில், மண்பாண்டத் தொழில், கிராம தீப்பெட்டித் தொழில், கிராம நார்த் தொழில்கள் ஆகிய தொழில்களின் அபிவிருத்திக்காக சகாயத் தொகைகளும், கடனுதவியும் அளிக்கப்பட்டன,” என்று, டில்லி மேல் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூபாய்க்கு அரையணு வரி!

காலணுவிற்குக் குறைந்த விலையுடைய சிகரெட்டுகள், புகையிலை, பீடி, இரண்டணுவுக்குக் குறைவான சுருட்டுகள் ஆகியவைகளுக்கு ‘ஒரு கட்ட’த்தில் ரூபாய் ஒன்றுக்கு அரை அணு விற்பனை வரி விதிக்கும் புது மசோதா சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் மாணிக்கவேலர், காலணுவிற்கு விற்கப்படும் சிகரெட்டுகள் காலணுவிற்குத்தான் விற்கப்படுமென்றும், அதற்கான வரியை சிகரெட் தயாரிப்பாளர்கள் தங்கள் இலாபத்தில் சரிசெய்துகொண்டு கட்டச் சம்மதம் தந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் குடியேற்றச் சட்டத் திருத்தம்!

இலங்கைத் தூதுவர் விளக்கம்

"அடுத்த ஆண்டின் மத்தியக் காலத்திற்கு முன்னதாகவே இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யும் வேலை முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இலங்கைக் குடிகளாகவும், இந்தியக் குடிகளாகவும் பதிவு செய்து கொள்கின்ற இந்த வேலைகளெல்லாம் முடிவடைந்த பின்னர், சட்டம் கடுமையாக அமுல் நடத்தப்படுகிறதா என்பதை பரிசிலனை செய்யலாம்; அதுவரையில் நாம் பொறுமையுடன் காத்துக் கொண்டுதானிருக்க வேண்டும்."

இவ்வாறு, சென்னை பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில், இந்தியாவிலிருக்கும் இலங்கைத் தூதுவரான எட்வின் விஜயரத்ன என்பவர் கூறியிருக்கிறார்.

இவ்வாண்டு, ஜனவரித் திங்கள் இறுதிவரையிலும், இலங்கைக் குடியுரிமை கோரிச் செய்துகொள்ளப்பட்ட 2,35,000 மனுக்களில் 34,974 பேருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டதென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"'கள்ளத்தனமாகக் குடியேறினதாகக் குற்றம் சாட்டப்படுகிறவர்கள், தாங்கள் இலங்கையிலேயே தான் வசித்து வந்தவர்கள் என்பதற்கான ஆதார பூர்வமான நிரூபணங்கள் செய்ய வேண்டும்'—இதுதான் இலங்கை சர்க்காரின் குடியேற்றச் சட்டத்தின் நோக்கம்," என்றும் அவர் கூறினர்.

"கள்ளக் குடியேற்றக்காரர்கள் எனக் கூறப்படுவோர் சிலர் இலங்கையரை மணந்துகொண்டு இலங்கையராகக் குடியுரிமை பதிவு செய்து கொள்கின்றனர்; ஆனல், பின்னர் அவர்கள் சர்க்காருக்கு விரோதமான செயல்களில் இறங்கி விடுகிறார்கள்; ஏற்கனவே, கள்ளக் குடியேற்றக்காரர்களைக் கைது செய்வதற்குச் சட்டம் இருக்கிறது; ஆனல் அதனை நிரூபிப்பது, வழக்குத் தொடருகிறவர்களைப்பொறுத்தது; இந்த முறை வெகுவான துன்பங்களைத் தருவதாக இருக்கிறது; ஆயினும், இலங்கையினரை மணந்துகொண்டு, இலங்கையின் குடிகளுமாகப் பதிவு செய்துகொண்டு, இலங்கை சர்க்காருக்கு எதிரான செயல்களில் இந்தியர் ஈடுபட்டுள்ளனர் என்று கூற முடியாது; பொதுவாக இத்திருத்தம் இந்தியர், பாகிஸ்தானிகள் ஆகிய எல்லா அயல்நாட்டுக் குடி மக்களையும் பாதிக்கும்" என்று அவர் மேற்கண்ட இலங்கை சர்க்காரின் குடியேற்றச் சட்டத் திருத்தம் பற்றிய தமது கருத்தைக் கூறும்போது தெரிவித்தார்.

சலுகை மேல் சலுகை!

டெல்லி பாராளுமன்ற (மக்கள் சபை) உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப் பெறும் வீட்டு வாடகை இனிமேல் கால் பங்காகக் குறைத்துக் கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது. இது தவிர, இனி மேல், மக்கள் சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் 1,800 தடவை டெலிபோன் மூலம் பேசவும் அனுமதிக்கப்படுவராம். இந்த அளவுக்கு மேற்கொண்டு அவர்கள் பேசினல் மட்டும்தான் அவர்களிடத்திலிருந்து அதற்கான கட்டணமும் வசூலிக்கப் பெறுமாம்; ஆயினும் டெலிபோன்களுக்கான வாடகை வசூலிக்கப்படமாட்டாது.

இத்திங்களிலிருந்து இந்தப் புதுச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பண்டித வல்லப பந்த்

டெல்லி மேல்சபையில் சர்க்கார் கட்சித் தலைவராக, உள்நாட்டு மந்திரி பண்டித வல்லப பந்த் நியமிக்கப்படுவதற்கு காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் நேரு விருப்பம் தெரிவித்துள்ளாராம்.

முன்பு தலைவராயிருந்த கோபால்சாமி அய்யங்கார் காலமாகிவிட்ட பிறகு சட்ட மந்திரி சி. சி. பிஸ்வாஸ் தற்போது தலைவராக இருந்துவருகிறர்,

மீண்டும் பேச்சுவார்த்தை...?

கொழும்பு, ஏப். 4—

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தினை அமுல் செய்வதில் உள்ள கஷ்டங்களை நீக்கிக் கொள்வதற்கென, மீண்டும், இரு நாடுகளிடையேயும் பேச்சுவார்த்தைகள் நடக்குமெனத் தெரிகிறது.

இந்தோனேஷியாவில் பாண்டுங் எனும் இடத்தில் இம்மாதம் நடைபெறவிருக்கும் ஆசிய ஆப்பிரிக்க மாநாட்டில் சந்திக்கும்போது, இந்தியப் பிரதமர் நேருவும், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையும் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடும் என்று தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

ஆலத்தம்பாடி
பஸ் நிலையத்திற்கருகில்
6—4—55 மாலை 5½ மணிக்கு
தலைவர்: ஆர். இலக்குமணன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு.
எஸ். எம். சுல்தான்

★

கீழப்பெரும்பள்ளம்
மேல வீதியில்
7—4—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். கிட்டப்பா
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
வி. ஏ. பாண்டியன்
கே. எஸ். சௌந்தரராசன்

★

6—4—55-ல் கம்மவான்பேட்டையிலும், 7—4—55-ல் நெல்லூரிலும், 8—4—55-ல் பள்ளிப்பட்டிலும் நடைபெறும் கழகக் கூட்டங்களில், தோழர்கள் ஆ. மணிஎழிலன், வே. அ. இளஞ்செழியன் ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

6—4—55 மாலை 6 மணிக்கு' சென்னை, புரசை, எண் 100, வெள்ளாழத் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில் தோழர் க அன்பழகன் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

சிங்கப்பூரில் ஜனநாயக ஆட்சி?

பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை

சிங்கப்பூர், ஏப். 4—

மலேயா காலனியில் அரசாங்கம் அமைப்பது பற்றி தொழிலாளர் முன்னணித் தலைவரான டேவிட் மார்ஷல், கவர்னர் ஜான் நிகால் ஆகியோரிடை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவில்லை.

புதிய சட்டசபைக்கு, சர்க்கார் நியமனம் பெறும் நான்கு உறுப்பினர்களில் யாரை நியமிப்பது என்ற பிரச்சினையில் இருவரும் கருத்து வேறுபாடு கொண்டனராம்.

சோஷலிஸ்டு தொழிலாளர் முன்னணித் தலைவராக, மார்ஷல் டேவிஸ் நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர், நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்களும் முன்னணி ஆதரவாளர்களாக இருக்க வேண்டும் என்று கோரினராம். இதை ஏற்றுக்கொள்ள கவர்னர் மறுத்துவிட்டிருக்கிறர்.

சட்டசபைக்காக நடைபெற்ற தேர்தலில் 25 இடங்களுக்குப் போட்டியிட்டு, 10 இடங்களில் இந்த தொழிலாளர் முன்னணி வெற்றி பெற்றது.

சட்டசபைக்கு, மலேயா சீன சங்கம், மக்கள் கட்சி ஆகியவை தனித்தனியே மூன்று இடங்களைப் பெற்றுள்ளது.

எஞ்சியுள்ள ஒன்பது இடங்களில் நான்கு முன்னேற்றக் கட்சியினருக்கும், இரண்டு ஜனநாயகக் கட்சியினருக்கும், மூன்று சுயேச்சைகளுக்கும் கிடைத்தது.

முன்னேற்ற, ஜனநாயகக் கட்சிகள், வலதுசாரிக் கட்சியினர் என்று தெரிகிறது.

தொழிலாளர் முன்னணியும் இதர இடதுசாரி கட்சிகளும், மலேயாவிற்கு உடனடியாக சுதந்திரம் வேண்டும் என்றும், கம்யூனிச ஒழிப்பு என்ற பெயரில பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரச் சட்டங்களை ஒழிக்க வேண்டும் என்று கோரியும் தேர்தலில் போட்டியிட்டனராம்.

நிதானமிழந்ததால் வந்த வினை!

தூங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்மணி எழுப்பிய குறட்டைச் சத்தம் தாங்க முடியாமல் நிதானமிழந்த அவரது கணவர், தமது தச்சு வேலைத் தொழிலுக்குப் பயன்படுத்தும் உளி ஒன்றினல் அப்பெண்மணியைப் பலமாகத் தாக்கிப் படுகாயப் படுத்தினராம். அந்த தச்சு வேலைக்காரர் வயது 40 என்றும், அம்மையாருக்கு 37 வயது என்றும் கூறப்படுகிறது. அவ்வம்மையாரின் தலையிலும், கழுத்திலும் விரலிலும் பலத்த காயமாம்!

இந்தச் சம்பவம், ஜப்பானிலுள்ள டோக்கியோ எனும் நகரில் இரண்டு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றதாக பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

நிசாம் அரசுரிமையின் இறுதிச் சின்னம்

செல்லாததாகிவிட்டது!

ஐதராபாத், ஏப். 3—

இன்று முதல், நிசாமின் அரசுரிமைச் சின்னமாகக் கடந்த ஒரு நூற்றாண்டுகாலமாக செலாவணியிலிருந்து வந்த 'ஹாலி சிக்கா' எனப்படும் நாணயம் செல்லாததாகிவிட்டது! இதுதான் நிசாம் அரசுரிமையின் கடைசிச் சின்னமாகும்!

"ஹாலிசிக்கா'க்கள் கொண்டது 6 இந்திய ரூபாய்களுக்குச் சமமாக இதுவரையில் இருந்துவந்தது; கடந்த 1953-ம் ஆண்டில் மட்டும் 42 கோடி 'ஹாலிசிக்கா' வழக்கமாகச் செலாவணியில் இருந்து வந்ததாம்.

இந்த உத்திரவு வெளியிடப்பெற்றதும் இதுவரையில் 35 கோடிக்கு மேற்பட்ட 'ஹாலிசிக்கா'கள் திரும்பப் பெறப்பட்டுவிட்டனவாம். இந்த நாணயங்களை மாற்றும் வசதி அடுத்த ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரையிலும் கிடைக்கப்பெறும் என்று தெரிகிறது.

சென்ற ஆண்டு ஏப்ரல்–டிசம்பர் வரையுள்ள காலத்தில் மொத்தம் 180 தந்தி அலுவலகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டனவாம்.

போன்: 40 தந்தி: 'ILWA'

குறுகிய கால வகுப்புகள்

முன் வருஷங்களில் நடத்தியதுபோல ஏப்ரல் மாதம் 24-ம் தேதி முதல், ஜூன் மாதம் 5-ம் தேதி வரை ஆடோமொபைல் சர்வீஸ் என்ஜினியரிங், ரேடியோ சர்வீஸ் என்ஜினியரிங் ஆகிய, ஆறு வாரங்கள் குறுகிய கால விடுமுறை வகுப்புகள் நடத்தப்படும். இதற்காக 18—4—55-ந் தேதியே இங்கு சேருமாறு வரவேண்டும்.

✶

விபரங்களுக்கும், பிராஸ்பெக்டஸுக்கும் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதுக:

G. D. NAIDU,
பிரசிடெண்ட்,
இண்டஸ்டிரியல் லேபர் வெல்பேர் அசோசியேஷன் லிமிடெட்,
அவனசி ரோடு, கோயம்புத்தூர்

முகாம்: லண்டன்,
27—3—'55

மதுரை நகரசபை சந்தைக்கடையாயிற்று!

தலைவர் தேர்தலில் தகராறு?

மதுரை, ஏப். 4—

மதுரை நகர சபைத் தலைவர் பதவியை அண்மையில் இராஜினமா செய்துவிட்ட ஏ. சிதம்பரம் எம். எல். ஏ., மீண்டும் பெருவாரியான நகர சபை உறுப்பினர்களால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறர்.

வாக்குப் பதிவின்போது அவருக்கு ஆதரவாக 28 பேரும், அவரை எதிர்த்த எஸ். காமராஜ் என்ற உறுப்பினர் ஒருவருக்கு ஆதரவாக 4 பேரும் வாக்களித்திருக்கின்றனர்.

36 பேர்களைக் கொண்ட அந்த நகர சபையில், இத்தேர்தலில் 32 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இந்தத் தேர்தல் கூட்டத்தில் உறுப்பினர்களிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டு, உறுப்பினர் ஒருவருக்கொருவர் நாற்காலிகளைத் தூக்கி எறியவும், வாக்குரிமைச் சீட்டுகளை நாசப்படுத்தவும் முயற்சிகள் செய்திருக்கின்றனர்.

தலைவர் பதவிக்கு போட்டியிட்ட உறுப்பினர் எஸ் காமராஜ் எழுந்து ஏதோ பேச முயன்றபோது, அவரை பேசக்கூடாது என்று தலைவர் கூறி உட்கார உத்திரவிட்டதின் பேரில், தன்னைப் பேச அனுமதித்தாலொழிய தாம் உட்காரப்போவதில்லை என்றும், மறுத்தால் வாக்குப் பெட்டிகளையும், வாக்குச் சாவடிகளையும் அழித்துவிடுவதாகவும் கூறியிருக்கிறர். இதற்கிடையில் சபைத் தலைவர் உறுப்பினர்களுக்கு வாக்குச் சீட்டுகளைக் கொடுக்க, அவர்களில் மூவர் வாக்குப் போட்டும் விட்டனராம். உடனே அந்த நகர சபைத் தலைவரின் மேஜை மீது பாய்ந்த உறுப்பினர்கள் ஜாபிதாவையும் வாக்குச் சீட்டுகளையும் பறிக்க முயன்றிருக்கிறர். சபைத் தலைவர் மேற்படி நபரைப் பிடித்து அப்புறம் தள்ளியதின் மூலம் இந்த முயற்சிகள் எல்லாம் தடுக்கப்பட்டிருக்கின்றன. உடனே சபையில் பலத்த குழப்பங்கள் ஏற்பட்டு இறுதியில் போலீசாரும் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர். பின்னர் ஒருவாறாக குழப்பம் அடங்கி தலைவர் தேர்தல் நடைபெற்றிருக்கிறது.

திருச்சிக்கருகில் தீவிபத்து

3 பெண்கள் கருகினர்! 400 வீடுகள் சாம்பலாயின

திருச்சி, ஏப். 4—

திருச்சியையடுத்த புள்ளம்பாடியில் நேற்று மாலை ஏற்பட்ட மிகப் பெரிய தீ விபத்து இன்று மாலை வரையிலும் தொடர்ச்சியாக இருந்துவந்ததாம்.

இத் தீ விபத்தில் 3 பெண்கள் கருகி மாண்டுவிட்டதாகவும், 400 வீடுகள் சாம்பலாக்கப்பட்டுவிட்டதென்றும் மொத்தச் சேதம் ரூ. 3 லட்சத்திற்கு மேற்பட்டிருக்குமென்றும் கூறப்படுகிறது.

ஆமணக்கு விதைகளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுத்து அதனை ஒரு பெண்மணி தகர டின் ஒன்றில் ஊற்றிக்கொண்டிருக்கையில் சில துளி எண்ணெய் அடுப்பு மீது விழ அது உடனே தீப்பற்றி கூரையும் தீப்பிடித்துக் கொண்டதாகவும், பலமாக வீசிய காற்றினல் அத்தீ மிகப் பெரிய தீ விபத்தாக மாறிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

இதன் விளைவாக, பெருவாரியான அளவு அறுவடை செய்யப்பட்ட தானியவகைகளும், இதர உணவுப் பொருட்களும் தீக்கிரையாகி சாம்பலாயின.

தீயை அணைக்கத் திருச்சி, தஞ்சை ஆகிய இடங்களிலிருந்து ஏராளமான தீ அணைக்கும் படையினர் வந்தும் தேவையான தண்ணீர் கிடைக்காததால் 24 மணி நேரமாக எந்தவிதப் பிரயோசனமுமில்லாமல் போய்விட்டது என்று பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இப்போது திருச்சி மாவட்டக் கலெக்டர், விபத்தால் நஷ்டமடைந்தோருக்கான நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ளாராம்.

கல்வி மந்திரியின் கருணையே கருணை!

"ஆசிரியர்களின் எல்லா தேவைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது உண்மைதான்; ஆயினும் அவர்களது குறைகளையும், தேவைகளையும் சர்க்காரே உணர்ந்து கொண்டுள்ளனரென்பதைக் காட்டிக் கொள்ளவே இப்போது 'அற்ப சொற்ப' மான சில வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன,"

இவ்வாறு சென்னை மாநில நிதி, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் மதுரையில் 'மாவட்ட ஆசிரியர்கள் கில்ட்' தமக்களித்த வரவேற்புக்கு பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆரம்பக் கல்விக்கென மாநில வரவு—செலவுத் திட்டத்தில் சுமார் 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனல் அத்தொகை முழுவதும் 45 சதவிகிதத்தினருக்குத்தான் போதுமானதாகுமென்றும், 75 சதவிகித மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு ரூ. 11 கோடி செலவாகுமென்றும், எனினும் பணச் செலவையெல்லாம் பார்த்துச் சோர்வுற்றுவிடாமல் படிப்படியாகத்தான் முன்னேறவேண்டியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.